Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, FEBRUARY 20 2025

வியாழக்கிழமை 20, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 163 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## “குடிநீரைச் சிக்கனமாக பயன்படுத்துங்கள்”

நாட்டில் தற்போது நிலவும் வறண்ட காலநிலை காரணமாக, குடிநீரைச் சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

### புதுக்கடை நீதிமன்றத்தில் துப்பாக்கிச் சூடு:

# கணேமுல்ல சஞ்சீவ பலி

## சட்டத்தரணி வேடத்தில் வந்தவர் கைவரிசை

## துப்பாக்கிதாரி கைது

கொழும்பு - புதுக்கடை நீதிமன்றத்துக்கு புதன்கிழமை (19) அன்று வழக்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட பாதாள உலக நபரான ‘கணேமுல்ல சஞ்சீவ’ என்றழைக்கப்படும் சஞ்சீவ குமார சமரரத்ன நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.


துப்பாக்கிதாரி பயன்படுத்திய துப்பாக்கி, நீதிமன்ற வளாகத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக வாழைத்தோட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கணேமுல்ல சஞ்சீவவை சுட்டுக் கொன்ற நபர், தனது கையில் இருந்த, ‘குற்றவியல் நடைமுறைச் சட்டம்’ என்ற புத்தகத்தின் நடு பகுதினை கைத் துப்பாக்கி வடிவில் தோண்டி, அங்கு கைத்துப்பாக்கியை மறைத்து வைத்திருந்தது தெரிய வந்ததாக, பொலிஸார் கூறியுள்ளனர்.



இந்த துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு, சட்டத்தரணி வேடத்திலேயே வந்த பெண் ஒருவரே ஆயுதத்தையும் வழங்கியமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





## “நாடு IMF இன் தடுப்புக்காவலில் உள்ளது”

கடந்த அரசாங்கங்களின் தவறான நிதி முகாமைத்துவத்தின் காரணமாக வங்குரோத்தடைந்த நமது நாடு, தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட தகுதிகாண் காலத்தில் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இந்த சூழ்நிலையில் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடிப்படை நடவடிக்கை இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக எடுத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



## “எதிரணியுடன் பேச தயார்”




பாராளுமன்றக் குழுக்களில் உறுப்பினர்களை ஒதுக்குவது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாட அரசாங்கம் தயாராக உள்ளது என்று சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், அலுவல் குழு, கோப், கோபா, பின்வரிசைக் குழு மற்றும் ஆலோசனைக் குழுக்கள் போன்ற பாராளுமன்றக் குழுக்களில் அதிக இடங்களை ஒதுக்க அரசாங்கம் முன்மொழிந்துள்ளதாகவும், சில குழுக்களில் ஏற்கெனவே அதிக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) இடம்பெற்ற கூட்டத்தில்,

தொடர்ச்சி P2

### புதுக்கடை துப்பாக்கிச் சூடு

## எதிரணி கவலை

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் புதன்கிழமை (19) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் கவலை தெரிவித்துள்ளதுடன், நாட்டில் கொலைகள் அதிகரித்து மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதாகவும் கூறியுள்ளனர்.

நீதிமன்றத்திற்குள்ளும் கூட ஒரு தனி நபரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால், அது ஒரு கடுமையான சூழ்நிலை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொலைகள் தினமும் நடப்பதாகக் கூறிய பிரேமதாச, இந்தப்

தொடர்ச்சி P2

## “வைத்தியர்களின் சம்பளம் தொடர்பில் கவலை வேண்டாம்”

அடிப்படை சம்பளம் மூன்று கட்டங்களாக அதிகரிக்கப்பட்டாலும், பட்ஜெட்டில் அதிகரிக்கப்பட்ட மொத்த அடிப்படை சம்பளத்தின் படி, வைத்திய அதிகாரிகளின் கூடுதல் நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள் கணக்கிடப்படுவதால், மருத்துவர்கள் தங்கள் கூடுதல் நேர கொடுப்பனவுகள் குறித்து கவலைப்பட எந்த காரணமும் இல்லை என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2ஆம் நாள் நாள் விவாதம் இடம்பெற்றது.

இதன்போது,

தொடர்ச்சி P2



### 09 வருடங்களுக்கு பின்னர் அதிகரிக்கப்படும்

## அரச ஊழியரின் அடிப்படை சம்பளம்

ஒன்பது வருடங்களுக்குப் பின்னர் அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை தற்போதைய அரசாங்கமே அதிகரித்துள்ளதாக தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். அதன்படி, ஆசிரிய சேவையில் தற்போது இணையும் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் 31,490 ரூபாவாகும். எனினும் ஏப்ரல் மாதத்தில் அது 39,211 ரூபாவாகவும் 3 வருடங்களின் பின் 53,060 ரூபாவாகவும் அதிகரிக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## “அனுரவின் பட்ஜெட் ரணிலின் 3ஆவது பட்ஜெட்"



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்வைத்துள்ள 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தைமுன்வைத்துள்ளாரோ என்றே தோன்றுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான கபிர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19)

தொடர்ச்சி P2

## தேர்தல் கட்டுப்பணங்களை மீள செலுத்த நடவடிக்கை

கடந்த 2023ஆம் ஆண்டில் நடத்தப்படவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியவர்களுக்கு அந்த பணத்தை மீண்டும் வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பணத்தை வைப்புச் செய்தமைக்காக வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களை அந்த நபர்கள் சமர்ப்பித்தால், அவர்களுக்கு அப்பணம் மீளளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பணத்தை வைப்புச் செய்த பற்றுச் சீட்டின் மூலப்பிரதி, வைப்புப் பணம் மீளளிப்புச் செய்வதற்கான விண்ணப்பக் கடிதம் ஆகியவற்றை கட்டுப்பணத்தை வைப்புச் செய்துள்ள குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## இன்றைய வெப்பநிலை தொடர்பில் எச்சரிக்கை

நாட்டில் இன்று வியாழக்கிழமை (20) வெப்பநிலையானது எச்சரிக்கை மட்டத்தை விடவும் அதிகரித்து காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, மேல், வடக்கு, வடமத்திய, கிழக்கு, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் நாளையதினம் வெப்பநிலை அதிகரித்து காணப்படும் என அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, தற்போது நிலவும் வெப்பநிலை குறித்து பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் கூறியுள்ளது.

### தலதா மாளிகை மீதான குண்டு தாக்குதலுக்கு

## ஜே.வி.பி. மன்னிப்பு கோரியதா?

யாழ். நூலகம் தொடர்பில் கதைக்கும் நீங்கள், தலதா மாளிகை மீதான தாக்குதலுக்காக சுய விமர்சனம் செய்தீர்களா? என அரச தரப்பினரிடம் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி கபீர் ஹாசிம் கேள்வி எழுப்பிய போது, எழுந்த யாழ். மாவட்ட எம்.பி. அர்ச்சுனா தலதா மாளிகை மீது புலிகள் தாக்கியிருந்தால் நான் மன்னிப்புக் கோருகின்றேன் என தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2 ஆம் நாள் நாள் விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி கபீர் ஹாசிம்,

அனுரகுமார திசாநாயக்க தனது வரவு - செலவுத் திட்ட உரையில், யாழ். நூலகம் தொடர்பில் கூறியிருந்தார். அதற்கு தீ வைப்பதற்கு அரசியல் கட்சியொன்று உதவியதாக அவர் குறிப்பிட்டிருந்தார். ஆம்... எமது தாய் கட்சியின் பெயர் அதனுடன் தொடர்புப்படுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

# கணேமுல்ல சஞ்சீவ பலி

மேற்படி, சம்பவத்தன்று சந்தேக நபர் சட்டத்தரணி போல் வேடமணிந்த, கூண்டில் இருந்த கணேமுலே சஞ்சீவவை நெருங்கி வந்து துப்பாக்கியால் சுட்டதாக நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், பாதாள உலகக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் புதன்கிழமை(19) அன்று சட்டத்தரணி வேடமணிந்த வந்த துப்பாக்கிதாரி ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதை அடுத்து, பாதுகாப்பு குறைபாடு தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

சட்டத்தரணி போல் வேடமணிந்த சந்தேக நபர், சட்டத்தரணிகளின் மேஜையில் அமர்ந்திருந்தார், பின்னர் கணேமுல்ல சஞ்சீவ தனது தடுப்புக்காவல் நிலை தொடர்பான விசாரணைக்காக நீதிமன்றக் கூண்டுக்குள் நுழைந்தபோது திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

துப்பாக்கிச் சூடு நடத்திய பிறகு, சந்தேக நபர் உடனடியாக சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

கடுமையான காயங்களுக்கு ஆளான கணேமுல்ல சஞ்சீவ, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 13ஆம் திகதி அன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட கணேமுல்ல சஞ்சீவ, ஆரம்பத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் பூசா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில், சிறை அதிகாரிகள் அவரை சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம், நாட்டின் மிகவும் பலத்த பாதுகாப்புடன் கூடிய நீதித்துறை வளாகங்களில் ஒன்றான புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்குள் பாதுகாப்பு குறைபாடுகள் இருப்பது குறித்து கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தொடர்புடைய அனைத்து சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். பாதாள உலகக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட சகல வழக்குகளையும் மீண்டும் விசாரிப்பதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஆஜராவோரை மட்டும் நீதிமன்ற வளாகத்தில் வைத்திருக்கவும், வெளியாட்கள் அனைவரையும் நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றவும் பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

துப்பாக்கிதாரியான 34 வயதுடைய மொஹமட் அஸ்மான் ஷெரிப்தீன் என்பவர் புத்தளம் - பலாவி பகுதியில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# "குடிநீரைச் சிக்கனமாக பயன்படுத்துங்கள்"

இது தொமர்பில் மேலும் தொரிவித்துள்ளதாவது, வறண்ட காலநிலையினால் நீர் மூலங்களில் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வரும் அதேவேளை, அதிக வெப்பம் காரணமாக நுகர்வோரிடையே நீரின் பாவனையும் அதிகரித்துள்ளது.

இதனால், நீர் விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, வாகனங்களைக் கழுவுதல் மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை என்பவற்றுக்கு நீரைப் பயன்படுத்துவதைக் குறைத்து, அத்தியாவசிய அன்றாட தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை கோரியுள்ளது.

# ஜே.வி.பி. மன்னிப்பு கோரியதா?

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இருவர் அங்கிருந்தமையினால் அந்தக் கட்சி மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதற்கு நாங்கள் கவலையடைகின்றோம். ரணில் விக்ரமசிங்க சில வருடங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற வகையில் மன்னிப்புக் கோரினார்.

# "நாடு IMF இன் தடுப்புக்காவலில் உள்ளது"

கொழும்பு சினமன் லைப் ஹோட்டலில் புதன்கிழமை (19) நடைபெற்ற 2025 வரவு -செலவுத் திட்டத்திற்குப் பின்னரான கருத்தாடல் (POST BUDGET FORUM 2025) இல் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு மூலம் கிடைத்த மூன்று வருட சலுகைக் காலத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி, 2028ஆம் ஆண்டுக்குள் சரியான பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் கடன் திருப்பிச் செலுத்தும் திறனை அடைய அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

வங்குரோத்தடைந்த ஒரு நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பல உலகநாடுகளுக்கு ஒரு தசாப்தம் வரை சென்றாலும், இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு ஒரு தசாப்தத்திற்கும் குறைவான காலமே செல்லும் என்று கணிப்பிட முடியும் என்றும் ஜனாதிபதி இங்கு தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரச வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1% ஆக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும், முன்னுரிமை அடிப்படையில் நிதியை செலவிடுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

பொருளாதாரத்தை விஸ்தரித்து பொருளாதாரத்தை கிராமங்களுக்குக் கொண்டு செல்வதன் மூலமும், குடிமக்களைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக மாற்றுவதற்கும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் குடிமக்கள் பயனடையும் திறனை அதிகரிக்க முடியும் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரத்தில் இருந்து விலக்கி வைக்கப்பட்ட குழுக்களை மீண்டும் பொருளாதாரத்திற்குள் கொண்டு வருவதன் மூலம் கிராம மட்டத்தில் சிறிய பொருளாதார அலகுகளை உருவாக்க தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், அதன்படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான ஆர்வத்தை நாட்டில் உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

கைத்தொழில்துறைக்கு உதவுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குவதே அரசாங்கத்தின் குறிக்கோள் என்றும் தெரிவித்துள்ளார்.

கிராமப்புற வறுமையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக கல்விக்காக இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் பாடசாலைக் கட்டமைப்பில் மனித மற்றும் பௌதீக வளங்களை மறுசீரமைக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கூறியுள்ளார்.

மேலும், இது ஒற்றைத் திசை கல்விக்குப் பதிலாக பல் திசைக் கல்வியை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதோடு அரச சேவைக்காக அதிக செலவு மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, அரச நிறுவனங்களின் செலவினங்களை மறுபரிசீலனை செய்யும் எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் அதிகாரத்தை ஊழல் இல்லாத இடமாக மாற்றியுள்ளதாகவும், இலஞ்சம் கொடுக்காத கலாச்சாரத்தை உருவாக்குவது குடிமக்களின் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்க புதிய வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட எதிர்பார்ப்பதாகவும், இந்த ஆண்டு அதிக ஏற்றுமதி வருவாயை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

துறைமுக மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை உருவாக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இந்த ஆண்டு திறமையான கொள்கலன் பரிமாற்ற மையத்தை உருவாக்குவதில் வரவு செலவுத் திட்டதின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக நகர வர்த்தக நாமத் திட்டங்கள் (City Brand) செயல்படுத்தப்பட்டு வருவதோடு அனுராதபுரம், யாபஹுவ மற்றும் யாழ்ப்பாணம் போன்ற நகரங்களை முன்னேற்றுவதற்கான திட்டங்களும் வகுக்கப்படுகின்றன. நாட்டின் பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு இராஜதந்திர சேவையைப் பயன்படுத்த எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, வர்த்தக முகாமைத்துவம் தொடர்பான முதுமானி ஆய்வாளர் சங்கத்தின் தலைவர் சுராஜ் ரதம்பொல உட்பட ஆய்வாளர்கள் மற்றும் வர்த்தகத் துறைசார்ந்தோர் பங்கேற்றுள்ளனர்.

# எதிரணி கவலை

பிரச்சினையைத் தீர்க்க உடனடி தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கை உறுதி செய்ய அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த விடயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில் எதிர்க்கட்சி ஆதரவளிக்கத் தயாராக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

பாதாள உலக நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளதாகவும், பாதாள உலக நடவடிக்கைகளுக்கு எதிராக அரசாங்கம் சட்டத்தை அமல்படுத்தும் என்றும் அரசாங்கத்தின் பிரதம கொறடா அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை ஒப்படைக்கப் பாதுகாப்பு அமைச்சகம் பொது மன்னிப்பு காலத்தை அறிவித்துள்ளதாகவும், பெரும்பாலான மக்கள் தங்கள் ஆயுதங்களைப் பாதுகாப்பு அமைச்சகத்திடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், பாதாள உலக நடவடிக்கைகள் அதிகரிப்பது குறித்து விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், துபாய் மற்றும் இந்தியாவிலிருந்து பாதாள உலக குற்றவாளிகளை வீழ்த்த அரசாங்கம் தலையிட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த சில நாட்களில் சுமார் 78 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், கொலைகள் இப்போது ஒரு பொதுவான நிகழ்வாகிவிட்டதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பொலிஸார், சிறப்புப் படை மற்றும் புலனாய்வு சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜெயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாட்டின் தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவரின் நடத்தை எவ்வாறு இருப்பினும், நீதிமன்றத்திற்குள் இவ்வாறான அசம்பாவிதங்கள் அரங்கேறுவது பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடு எனவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# "எதிரணியுடன் பேச தயார்"

குழுக்களில் உறுப்பினர்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான பிரச்சினை, அலுவல் குழு கூட்டத்தின் போது அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளுடன் ஒரு நியாயமான கலந்துரையாடலில் தீர்க்கப்பட வேண்டும் என்று சபாநாயகர் அறிவித்ததைத் தொடர்ந்து அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கூட்டத்திற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் குழுக்களில் எதிர்க்கட்சிகளுக்கு போதுமான எண்ணிக்கையிலான இடங்கள் ஒதுக்கப்படுவது குறித்து, கடந்த வாரங்களாக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் கவலைகளை எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "அனுரவின் பட்ஜெட் ரணிலின்...

இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2ஆம் நாள் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்த கபீர் ஹாசிம் எம்.பி. மேலும் பேசுகையில், 2024ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பல முக்கிய அம்சங்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தில் யோசனைகளில் பாதகமான பல யோசனைகள் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியினர் கடந்த காலங்களில் 75 ஆண்டுகால அரசியலை சாபம் என்று விமர்சித்தார்கள். ஆனால் 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் அன்று சாபம் என்று குறிப்பிட்டதைத் தவறென்று தற்போது ஏற்றுக்கொண்டுள்ளார்கள். தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கடந்த காலங்களில் ஜே.வி.பியினர் ஏலம் விட்ட பல கொள்கைகள் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# "வைத்தியர்களின்...

வைத்தியர்களின் கூடுதல் நேர விகிதங்கள் 80/1 இலிருந்து 120/1 ஆகக் குறைந்துள்ளதால் அவர்கள் கடுமையான பிரச்சினையை எதிர்கொண்டுள்ளதாகக் கூறிய பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்தனேவின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன், புதிய சம்பள அதிகரிப்பின்படி, அடிப்படை சம்பளம் மூன்று கட்டங்களாக அதிகரிக்கப்படுவதாகவும், இருப்பினும், மருத்துவ அதிகாரிகளுக்கான கூடுதல் நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள் மொத்த சம்பள அதிகரிப்பின் அடிப்படையில் கணக்கிடப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதத்தை விட ஏப்ரல் மாதத்தில் மருத்துவ அதிகாரிகளின் சம்பளம் அதிகமாக இருக்கும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஆரம்ப நிலை வைத்திய அதிகாரியின் அடிப்படை சம்பளம் ரூ.26,000 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரச ஊழியரின்...

பாராளுமன்ற அமர்வில், செவ்வாய்க்கிழமை (18) 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனை குறிப்பிட்டுளுளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் முன்வைக்கப்பட்டிருக்கும் வரவு-செலவு திட்டம் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த வரவு - செலவு திட்டமாகும். 2016ஆம் ஆண்டுக்கு பின்னர் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. 9 வருடங்களுக்கு பின்னர் இம்முறை அது அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

அரச சேவையில் இணைந்துகொள்ளும் (பி.எல்.1) ஒருவருக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த அடிப்படைச் சம்பளமான 24,250 ரூபாய், 15,750 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு தற்போது 40 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 17,800 ரூபாவும் வழங்கப்படுகிறது. அதேபோன்று கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு தற்போது வழங்கப்படும் அடிப்படைச் சம்பளம் 28,940 ரூபாவாகும். வரவு செலவு திட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளதற்கமைய அது 3 வருடங்களில் 50,630 ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது.

அவர்களின் அடிப்படைச் சம்பளத்துடன் 21,690 ரூபாய் அதிகரிக்கப்படுகிறது. அத்துடன், வாழ்க்கைச்செலவு கொடுப்பனவாக 17,500 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

மேலும், புதிதாக இணைந்து கொள்ளும் டொக்டர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் 54,290 ரூபாவாகும். அது இந்த வரவு - செலவு திட்டத்தின் மூலம் 91,750 ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது. அவர்களின் மேலதிக நேர கொடுப்பனவாக ஒரு மணித்தியாலத்திற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 687 ரூபா, ஏப்ரல் மாதத்துக்கு பின்னர் 764 ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் தற்போது 37,260 ரூபாவாகும். அவர்களின் அடிப்படைச் சம்பளம் 63,640 ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது. இந்த துறைக்கு புதிதாக இணைந்துகொள்பவருக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் 10,606 ரூபா அதிகரிக்கப்படுகிறது.

இவ்வாறு அரச துறையில் அனைத்து தரப்பினரின் அடிப்படைச் சம்பளம் அவர்களின் சேவைக் காலத்தின் பிரகாரம் அதிகரிக்கப்படுகின்றது. இதனை சரியாக புரிந்துகொள்ளாத சிலரே விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். அதனை நாம் கருத்திற்கொள்ளப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# “நிதி எமக்கு பிரச்சினை அல்ல; இளைஞர்களே தேவை”

வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு நிதி பிரச்சனை இல்லை. அபிவிருத்தியை முன்கொண்டு செய்வதற்கான இளைஞர்களே தேவைப்படுகிறார்கள் என வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மன்னார், மடு, இரணை இலுப்பைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை தரமுயர்த்தி உயர் தர வகுப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ந.கோபு தலைமையில் புதன்கிழமை (19) இடம்பெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

“மாணவர்களை உயர்த்த முடியும் என்கின்ற தூரநோக்கு இப் பாடசாலையின் அதிபரை போல் இருக்கும் பட்சத்தில் அதனை சாதிக்க முடியும். இன்று பல இடங்களில் நேரான தூரநோக்கு இல்லாமல் இருக்கிறது. இன்று பலரும் எதிர்மறையாக சிந்திப்பவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் எப்போதும் எங்களால் முடியாது.



எங்களால் இதனை சாதிக்க இயலாது என்று கூறிக்கொண்டே இருக்கிறார்கள்.

மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயராமைக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கின்றது. பல அலுவலர்களும் அவ்வாறான ஒரு எதிர்மறையான மனம் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். எதையாவது செய்ய கூறும் போது எமக்கு அது இல்லை. இது இல்லை என்று கூறுகின்ற ஒரு மனப்போக்கு அவர்களுக்கு காணப்படுகின்றது. அவர்கள் அவ்வாறு இருந்து பழகி விட்டார்கள். வேலைகளை செய்வதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை.

தற்போது நமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

வட மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் விசேட நிதியை ஒதுக்கி இருக்கின்றது. அது உள்ளூர் வீதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

எங்களைப் பொறுத்த வரைக்கும் மிகவும் வறுமையில் உள்ள மக்களினுடைய வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்பதாகவே இருக்கின்றது. அதனை அடைவதற்கு நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

இந்தப் பாடசாலையினுடைய அதிபர் நேராக சிந்திக்கின்ற ஒருவராக இருக்கின்றார். அதேபோலவே இந்த பிரதேசத்தின் விவசாய போதனாசிரியர் ஒருவரை நான் சந்தித்தேன். அவர் மிகவும் துடிப்பான இளைஞனாக காணப்பட்டார். அவர் மிகவும் செயற்பாடு உள்ளவராக காணப்பட்டார்.

அவ்வாறான இளைஞர்களே அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகிறார்கள். நிதி எங்களுக்கு பிரச்சினை இல்லை. ஆனால் எவ்வாறு செயல்படுத்த போகின்றோம் என்பது தான் இங்கு இருக்கின்ற பிரச்சினை.


இதுவரை எங்களுக்கு பல பிரச்சினைகள் இருந்தது. குறிப்பாக மக்களுடைய தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. மக்கள் அலுவலகங்களுக்கு சென்றால் அங்கு தங்களுடைய செயற்பாடுகளை செய்ய முடியவில்லை என்கின்ற பிரச்சினைகள் இருந்தது. மக்களுடைய தேவைகளை கூட அறிய முடியாமல் இருந்தது. அவை மாற்றப்படுகின்றன.

நாங்கள் நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களையே முன்னேற்ற வேண்டும். அரசாங்கம் கூட கிராமபுற வீதிகளை புனரமைக்க வேண்டும் என கூறுகின்றது” என தெரிவித்தார்.

## ‘கஜ்ஜா’வுடன் மகனும் மகளும் உயிரிழப்பு







மித்தெனிய, கடேவத்த சந்தி பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர் ‘கஜ்ஜா’ என்ற அருண விதானகமகே என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

இறந்தவரின் மனைவி வெளிநாட்டில் இருப்பதாகவும், உயிரிழந்தவர் தனது இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்ததாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 39 வயதான கஜ்ஜா என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார்.

மகளும், மகனும் படுகாயமடைந்த நிலையில், தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், 6 வயதான சிறுமி காலை உயிரிழந்துள்ளார்.

9 வயதுடைய சிறுவன் எம்பிலிப்பிட்டிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளதுடன், சம்பவத்திற்கு T56 ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களைக் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கணவனுக்கு ஐஸ் கொடுத்த மனைவி



ரீ.எல்.ஜவ்பர்கான், கனகராசா சரவணன்

சிறையிலிருக்கும் தனது கணவனுக்குக் கொடுப்பதற்காக உணவுடன் ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருளைச் சூட்சுமமாக மறைத்துக் கொண்டு சென்ற குறித்த சந்தேக நபரின் மனைவியைச் செவ்வாய்க்கிழமை மாலை(18) சிறைச்சாலை அதிகாரிகள் கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை - ஓட்டமாவடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரைக் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதை அடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவுக்கு அமைய மட்டு. சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கணவனைப் பார்ப்பதற்காக உணவு மற்றும் புகையிலைகளை மனைவி எடுத்துச் சென்றுள்ளார். அவைகளைச் சிறைச்சாலை அதிகாரிகள் சோதனையிட்ட போது புகையிலைக்குள் சூட்சமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிராம் ஐஸ் போதைப் பொருளை மீட்டதுடன் குறித்த பெண்ணை சிறைச்சாலை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஓட்டமாவடி 3ஆம் பிரிவு உசேனியா வீதியைச் சேர்ந்த 27 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டதாகவும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## மாற்றி அடித்தார் அர்ச்சுனா எம்.பி




புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் புதன்கிழமை (19) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கருத்துரைத்த யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, பொது அமர்வுகளின் போதும் தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தமக்குப் பலரால் கடந்த சில வாரங்களாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகப் பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த அமர்வுகள் முடிந்து மீண்டும் யாழ்ப்பாணம் செல்ல திட்டமிட்டுள்ளோம். எமது நாட்டில் இந்த விவகாரம் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளதால், பொது அமர்வுகளின் போதும், தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் சபாநாயகருக்கு அனுப்பப்படும் என்று பிரதி சபாநாயகர் தெரிவித்தார்.

## மீண்டுமொரு செல்ஃபி விபத்து





பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி புதன்கிழமை (19) காலை பயணித்த பொடி மெணிக்கே ரயிலில் பயணித்த பெண் சுற்றுலாப் பயணி ஒருவர், செல்ஃபி எடுப்பதற்கு முயன்ற போது, ரயிலில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக ஹாலி-எல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் ஹாலி-எல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அமுனுவெல்பிட்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளதுடன் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 50 வயதுடைய பர்சினோமா ஒல்கா என்ற பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண், 12 பேர் கொண்ட தமது குடும்பத்தினருடன் பதுளைக்கு வருகை தந்து எல்ல சுற்றுலா பிரதேசத்தைப் பார்வையிடும் நோக்கில் குறித்த ரயிலில் பயணித்த போதே இந்த கோர விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த அவரை சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்த போதும் குறித்த பெண் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹாலி-எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஸ்டாலினை சந்தித்த ஜீவன்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தமிழ்நாடு தி.மு.க. தலைமையகத்தில் புதன்கிழமை (19) அன்று மரியாதை நிமித்தம் சந்தித்துள்ளார்.

## செல்வம் அடைக்கலநாதனின் கேள்விக்கு முதல்வர் பதில்

மன்னாரில் கனிய மண் அகழ்வு நடவடிக்கையால் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் உன்னிப்பாக அவதானம் செலுத்தியுள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பில் நிலைமைகளை ஆராய்ந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(19) வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் முன்வைத்த விசேட கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கையிலேயே சபை முதல்வர்



இதனைக் கூறியுள்ளார்.

செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, அரசாங்கத்திடம் விசேட கோரிக்கைகளை முன்வைத்துக் கூறுகையில், மன்னாரில் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே புதன்கிழமை (19) காலை பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. கனிய மண் அகழ்வு தொடர்பான முயற்சிகள் நடக்கும் நிலையில் அதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். கனிய மண் அகழ்வுக்கு பொலிஸார் உடந்தையாக இருப்பதால் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதனால் இதனை உடனடியாக நிறுத்திப் பேசி உடன்பாட்டுக்கு வர வேண்டும். மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்திலும் இந்த மண் அகழ்வைச் செய்யக் கூடாது என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது சமூகப் பொறுப்பாகும்

மானிட குலத்துக்கும் பூமிக் கிரகத்தின் எதிர்காலத்துக்கும் நீர் ஒரு முக்கிய இயற்கை வளம் என்றே கூறலாம். அந்தவகையில், நீரானது எமது மிகப்பெரிய இயற்கை வளமாகும். இந்த நீர் வளத்தை வேறு எதனாலும் ஈடு செய்யப்பட முடியாது. அவ்வாறு எமது உயிர்வாழ்வுக்கு உறுதுணையாக உள்ள நீரை நாம் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

நீரைச் சேமிக்கும் முறை என்பது வருடத்திற்கு ஒரு சில நாட்கள் செய்ய வேண்டிய செயல் அல்ல. தற்போது பெருகிவரும் மக்கள் தொகையில் நீர் சேமிப்பு முறைகளை ஒவ்வொரு விநாடியும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தில் அனைவருமே உள்ளோம். தண்ணீர் பற்றாக்குறை இன்று இல்லாவிட்டாலும் நாளைக்கே வரலாம். வருமுன் காப்பதே சாலச் சிறந்தது. உங்களின் சிறு கவனமும் சில லீட்டர் தண்ணீரைச் சேமிக்கலாம்.

அந்த வகையில், தற்போது நாட்டில் நிலவும் வறண்ட காலநிலை காரணமாக, குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவுறுத்தியுள்ளது.

வறண்ட காலநிலையினால் நீர் மூலங்களில் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வரும். அதேவேளை, அதிக வெப்பம் காரணமாக நுகர்வோரிடையே நீரின் பாவனையும் அதிகரித்துள்ளது. இதனால், நீர் விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, நீரை விரயம் ஆகாமல் சிக்கனம் ஆகாமல் அனைவரும் பழக வேண்டும்.

அதாவது, வீடுகளில் குழாயைத் திறந்து விழும் தண்ணீரைக் கொண்டு நேரடியாகப் பாத்திரங்களைக் கழுவுவதைத் தவிர்த்து, ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீரைப் பிடித்து அதிலிருந்து தண்ணீரை எடுத்துக் கழுவலாம். குடிநீரை ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்கலாம்.

கோடைக் காலத்திலும்கூட குளியலறை 'ஷவரை' திறந்து விட்டு, நேரம் போவது தெரியாமல் குளித்து நீரை வீணாக்குவது முறையல்ல. மாறாக, வாளியில் தண்ணீரை நிரப்பிக் குளிப்பதன் மூலம் நீரைச் சிக்கனப்படுத்தலாம்.

கோடைக் காலத்தில் தண்ணீரின் சிக்கனம் கருதி, காலையில் மட்டும் குளித்து விட்டு, மாலையில் கை, கால்கள், முகம் மட்டும் கழுவிக் கொண்டால், தண்ணீரைச் சேமிக்க முடியும்.

வீட்டில் வாகனங்கள் வைத்திருப்பவர்கள், அதைத் தண்ணீர் ஊற்றிச் சுத்தப்படுத்துவதை விட்டுவிட்டு, துணியை நீரில் நனைத்து அதன் மூலம் துடைத்துச் சுத்தப்படுத்தலாம்.

தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள இடங்களில் வசிப்போர், துணி துவைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது.

தற்போது உலகிலுள்ள அனைத்தும் வணிக மயமாகி விட்டதால் காற்றையும், தண்ணீரையும் விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளது. இனிவரும் காலத்தில் தண்ணீர் தான் மூலாதார பிரச்சினையாகிவிடும். இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் ஆண்டுக்கு ஆண்டு மழை குறைந்து வருகிறது. இதனால் கடும் வறட்சி நிலவுகிறது. தண்ணீரின்றி உயிர்கள் மடிகின்றன. எனவே, அதிக அளவு தண்ணீரை வீணாக்குவதை நன்கு உணர்ந்து, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட ஒவ்வொருவரும் உறுதி கொள்வது அவசியம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

அடுத்தவர் விடயங்களில் சுவாரஸ்யங்களைத் தேடுபவர்கள், தங்களின் பிரதான வேலைகளை மறந்து விடுகின்றார்கள்.

கடைக்குப் பொருட்களை வாங்கச் செல்பவர்கள், தெருச் சண்டைகளை இரசிப்பதால், வீட்டுக் கருமங்களையே மறந்துவிடுகின்றார்கள்.

பலரது நேரம், வீணாகவே விரயமாகிக் கொண்டிருக்கின்றது. பொழுதுபோக்கு எனும் பெயரில், மனிதன் சோம்பேறியாவதும் உண்டு. கடுமையாக உழைப்பவர்களுக்கே ஓய்வு தேவைப்படுகின்றது.

கடின உழைப்பை நிராகரிப்பது போல் நடப்பது மகா தவறு. இதனால், கடின உழைப்பாளிகள் சமூகத்தில் நம்பிக்கை இழந்துவிடுகின்றார்கள்.

குடும்பத்திலும் அக்கறை காட்டாமல், தங்களைச் சுற்றியிருப்பவர்களின் காலத்தை வீணடிப்பவர்கள், உலகுக்குப் பாரமாகின்றார்கள். காலத்தை வீணடிப்பவர்கள், உலகுக்குப் பாரமாகின்றார்கள். காலத்தை வீணடிப்பவர்கள், உலகுக்குப் பாரமாகின்றார்கள்.

மனித ஆளுமை, அறிவிலும் செயலிலும் தங்கியிருக்கின்றது. சகல உயிர்களும் தமக்கான கருமங்களைச் செய்தபடியே இருக்கின்றன. உலகை மெருகூட்ட கடமையைச் செய்க!

நன்றி–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

# 'மாற்றம்' ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

**முருகானந்தம் தவம்**

அனுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் நாட்டைப் பொறுப்பேற்றது முதல், தற்போது வரை முன்னெடுத்து வரும் அரசியல், வெளிவிடும் கருத்துக்கள், நடந்து கொள்ளும் முறைகள் எல்லாம் வேடிக்கையானதாகவும் விநோதமானதாகவும் வில்லங்கமானதாகவுமே காணப்படுவதனால் மக்கள் மத்தியில் அவர்களின் 'திசைக்காட்டி' வலுவிழக்கத் தொடங்கியுள்ளதுடன், மக்களின் விசனத்திற்கும் கிண்டலுக்கும் 'அனுரகுமார சகோதரர்கள்' ஆளாகி வருகின்றார்கள்.

'மாற்றம்' என்ற கோஷத்தினால் மக்களைச் சூடாக்கி, மூளைச்சலவை செய்து, நாட்டையும் ஆட்சியையும் கைப்பற்றிய திசைக்காட்டியினர், இன்று செய்து வரும் அரசியல் உண்மையில் 'மாற்றம்' நிறைந்ததுதான். ஆனால், அது என்ன மாற்றம்?,எதில் மாற்றம்? எப்படிப்பட்ட மாற்றம்? என்று சற்று அலசி ஆராய்ந்தால் திசைக்காட்டியினரின் மூளையில் தான் ''மாற்றம்''ஏற்பட்டுள்ளது என்பதனை நாட்டு மக்கள் நன்கறிய முடியும்.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பினாமியான தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) யின் பலமே அவர்களின் பேச்சாற்றால் தான். தமது ஆவேச உரைகள் மூலம் மக்களை உசுப்பேற்றுவதில் இவர்களை விஞ்ச ஆள் கிடையாது. இதனால்தான் இவர்களிடம் பேச்சு மட்டுமே இருக்கும் செயல் இருக்காது என அரசியலில், "பழம் தின்று கொட்டை போட்டவர்கள்" பலர் கூறியபோதும், ஜே.வி.பி-என்.பி.பி. காரர்களின் ஆவேச பிரசார உரைகள், நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளில் மூழ்கிப்போன மக்கள் நாட்டில் பெரும் மாற்றம் நிகழும் என்ற நம்பிக்கையில் இவர்களுக்கு வாக்களித்து ஆட்சி பீடம் ஏற்றினார்கள்.

இவ்வாறு மக்களின் 'நம்பிக்கை'யினால் ஆட்சி பீடம் ஏறியவர்கள், இன்று செய்து வரும் அனுபவமற்ற அரசியலாலும் 'அனுர அலை'யினால் எம்.பியானவர்களும் அமைச்சர்களானவர்களும் வெளியிட்டு வரும் கோமாளிக் கருத்துக்களினாலும் நடவடிக்கைகளினாலும், முழு நாடும் சிரிப்பாய் சிரிப்பதுடன், "பஞ்சு மூட்டை குடோனிலேயே இருந்திருக்கலாம்" என்ற கருத்துபோல, இவர்கள் எதிர்க்கட்சியாகவே இருந்திருக்கலாம் என்ற கருத்துக்களும் வலுப்பெற்று வருகின்றன.

இதனால்தான் 'திசைகாட்டி' செயலிழக்க முன்னர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தி ஓரளவுக்கேனும் வெறியைத் தக்க வைக்க வேண்டுமென்பதில் 'அனுரகுமார சகோதரர்கள்' தீவிரமாக இறங்கியுள்ளார்கள்.

'திசைகாட்டி' மூலம் 'மாற்றம்' செய்கின்றோம் என நினைத்து, இவர்கள் செய்யும் ஒவ்வொரு மாற்றமும் "பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை''யாகவே முடிந்து வருகின்றது. அந்த வகையில், இவர்கள் நாட்டில் இதுவரையில் என்ன மாற்றம் செய்துள்ளார்கள் என்பதனை சற்று ஆராய்வோம்.

உண்மை, நேர்மை என முழங்கியதுடன், ஊழல், மோசடிகள், போலி. பித்தலாட்டங்களை ஒழிப்போம் என முழங்கியவர், தமது அரசின் முதல் தெரிவாகத் தெரிவு செய்த சபாநாயகரே 'போலி கலாநிதி'பட்ட சான்றிதழ் சர்ச்சையில் சிக்கி உண்மையை நிரூபிக்க முடியாது, பதவியேற்ற சில தினங்களிலேயே சபாநாயகர் பதவியிலிருந்து இராஜிநாமா செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனை 'குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டவுடனேயே பதவி விலகி முன்மாதிரியாகச் செயற்பட்ட சபாநாயகர். இதுதான் எமது ஆட்சியின் மாற்றம்''என விழுந்தும் மீசையில் மண்படாத கதையை திசைக்காட்டியினர் கூறி மக்களைத் திசை திருப்பினர்.

இந்நிலையில், நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டு அது தொடர்பிலான சர்ச்சைகள் வெளிக் கிளம்பிய நிலையில், 'கடந்த அரசு 20 கிலோ சிவப்பு அரிசியை எடுத்து, வெள்ளை அரிசியைச் சாப்பிடுபவர்களுக்குக் கொடுத்து, அதையும் சாப்பிடச் சொன்னதாலும் அரிசியைக் கோழிகள் அதிகமாக உண்பதனாலும்தான் தற்போது நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு ஒரு கையொப்பத்தில் தீர்வு காண முடியும் என முன்னர் ஒரு பேச்சுக்கே கூறியிருந்தேன். எனினும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சவால் மிக்கது' என கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தியும் முன்னெப்போதும் ஒருவரும் கூறாத மாற்றான காரணத்தைக்கூறி மக்களைச் சிரிக்க வைத்தனர்.

இதன் தொடர்ச்சியாக நாட்டில் தேங்காய்க்கான தட்டுப்பாடு ஏற்பட்டு அது தொடர்பிலான சர்ச்சைகள் வெளிக்கிளம்பிய நிலையில், மக்கள் "வீடுகளில் தேங்காய்ப் பால் பிழிவதும் பால் சொதி வைப்பதும், தேங்காய் சம்பல் செய்வதும் தான் தேங்காய் தட்டுப்பாட்டுக்குக் காரணம்" என கைத்தொழில் பிரதி அமைச்ச சதுரங்க அபேசிங்கவும் "தேங்காய்களைக் குரங்குகள் களவாடுவதனாலும் சேதப்படுத்துவதனாலுமே தேங்காய்களுக்குத் தட்டுப்பாடு" என கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால் காந்தவும் கூறி மக்களை விசனப்பட வைத்தனர்.

இதற்கிடையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாட்டில் ஒன்றரை மணிநேர மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டது பாணந்துறை உப மின்நிலையத்தில் உள்ள மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்த மின்வெட்டு சில தினங்கள் அமுல்படுத்தப்பட்ட நிலையில் மின் நெருக்கடி தொடர்பில் எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தபோது பாணந்துறை உப மின்நிலையத்தில் உள்ள மின் கட்டமைப்பில் குரங்கு ஒன்று மோதியதன் காரணமாக நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டதாக மின்சக்தி சக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி மின்வெட்டுக்கான பழியைக் குரங்கு மீது சுமத்தினார். இவ்வாறு, நாடு தழுவிய மின்தடையை ஏற்படுத்தி எதிர்பாராத 'மாற்றமாக' குற்றவாளியான குரங்கு சர்வதேச தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்திருந்தது.

நாட்டில் ஏதாவது நெருக்கடிகள், பொருள் தட்டுப்பாடுகள் ஏற்பட்டால், குற்றங்கள், ஊழல் மோசடிகள் இடம்பெற்றால் முன்னைய அரசுகளின் காலத்தில் எதிர்க்கட்சிகள் அரசு மீதும் அரசுகள் எதிர்க்கட்சிகள் மீதும் பழி போடுவதுதான் அரசியல் கலாசாரம். ஆனால், இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுவோம் என உறுதியளித்து ஆட்சிக்கு வந்த 'அனுரகுமார சகோதரர்கள்' சொன்னது போலவே ஒரு 'மாற்றம்' ஏற்படுத்தி எதிர்க்கட்சிகள் மீது பழி போடாமல்,குற்றம்சாட்டாமல் தேங்காய் தட்டுப்பாடு, மின் வெட்டுகளுக்கான பழியை, குற்றச்சாட்டை மறுக்க முடியாத, எதிர்த்துப்பேச முடியாத குரங்குகள் மீது போட்டு நாட்டில் முன்னெப்போதுமில்லாத 'மாற்றம்' ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

அதுமட்டுமன்றி, தேங்காய்களுக்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திய குற்றத்திற்காகவும் மின் வெட்டை அமுல்படுத்த வேண்டிய நிலைமையை அரசுக்கு ஏற்படுத்திய குற்றத்திற்காகவும் குரங்குகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்யவும் இலங்கையில் குரங்குகளைப் பிடித்து ஒரு தனித் தீவில் விடுவிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பிடிபட்ட குரங்குகளைக் கொண்டு சென்று விடுவிப்பதற்கு ஒரு தீவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், குரங்குகளைப் பிடிக்கும் பொறுப்பு ஜகத் மனுவரண எம்.பியிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவும் முன்னைய எந்தவொரு அரசும் செய்திராத 'மாற்றம்'ஆகவே உள்ளது.

தமது அரசைப் பாதுகாத்துக்கொள்ள எதிர்க்கட்சிகளைக் குற்றம்சாட்ட முடியாத நிலையில், குரங்குகளைக் குற்றவாளிகளாக்கி, 'மாற்றம்' செய்த 'அனுரகுமார சகோதரர்கள்' திசைக்காட்டிச் செயலிழக்க முன்னர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதிலும் 'மாற்றம்' ஒன்றைச் செய்துள்ளனர். அதாவது கடந்த அரசுகள் பாராளுமன்றத்தைக் கூட்டி ஏதாவது சர்ச்சைகள் ஏற்பட்டு சில மணி நேரங்களில் ஒத்திவைத்தால் வீணாகப் பாராளுமன்றத்தைக்கூட்டி மக்களின் கோடிக்கணக்கான பணம் வீணடிக்கப்படுவதாகக் குற்றம்சாட்டி நீலிக்கண்ணீர் வடித்த 'அனுரகுமார சகோதரர்கள்' கடந்த வெள்ளிக்கிழமை உள்ளூராட்சி சபைகளுக்கான சட்டமூல திருத்தம் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு ஒன்றை அறிவிப்பதற்காகப் பாராளுமன்றத்தை '25 நிமிடங்கள்' மட்டும் கூட்டி மக்கள் பணத்தை வீணடித்தார்கள்.

அத்துடன், ஒரு வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமானவரோ அல்லது நிதி அமைச்சரோ சமர்ப்பித்து உரையாற்றுவதற்காகப் பாராளுமன்றம் கூட்டப்பட்டு அன்று வரவு-செலவுத் திட்ட உரை மட்டுமே நிகழ்த்தப்படுவதுதான் பாராளுமன்ற சம்பிரதாயம். வரலாறு. ஆனால், கடந்த 17ஆம் திகதி 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும் நிதியமைச்சருமான அனுரகுமார திசநாயக்க சமர்ப்பித்து உரையாற்றிய பின்னர், உள்ளூராட்சி சபைகளுக்கான சட்டமூல திருத்தம் தொடர்பான விவாதத்தை நடத்தி பாராளுமன்ற சம்பிரதாயத்தில் வரலாற்றில் 'அனுரகுமார சகோதரர்கள்' 'மாற்றம்' செய்துள்ளனர்.

இவ்வாறாக 'மாற்றம்' என்ற பெயரில் 'அனுரகுமார சகோதரர்கள்' செய்யும் அனுபவமற்ற, கோமாளித்தன அரசியல் எதிர்க்கட்சியாக இருந்தபோது, மக்களினால் பெரிதும் நேசிக்கப்பட்ட, மரியாதை செலுத்தப்பட்ட ரில்வின் சில்வா, அனுரகுமார திசாநாயக்க, விஜித ஹேரத், சுனில் கந்துன் நெத்தி போன்ற அரசியல் தலைவர்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதாகவும் மக்கள் பெரிதும் எதிர்பார்த்த தேசிய மக்கள் சக்தி அரசின் மீது நம்பிக்கை இழக்க வைப்பதுமாகவே உள்ளது. இவ்வாறான அனுபவமற்ற, கோமாளித்தனமான அரசியலை 'அனுரகுமார சகோதரர்கள்' தொடர்ந்தால் நாட்டில் மீண்டும் ஒரு 'மாற்றம்' ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## கடிதங்கள்

# கட்டாக்காலி நாய்களில் தொல்லை அதிகரிப்பு



மஸ்கெலியா நகரில் கட்டாக்காலி நாய் தொல்லை அதிகரித்துள்ளதனால் பாதசாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாக மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட சாமிமலை, மஸ்கெலியா, நல்லதண்ணி, ஆகிய நகரங்களில் கட்டாக்காலி நாய் தொல்லை அதிகரித்து உள்ளது.

இதனால் நகருக்கு வரும் பொது மக்கள் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட மஸ்கெலியா பிரதேச சபை, உடன் கவனம் செலுத்தி கட்டாக்காலி நாய் தொல்லைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



### தனியார் துறை சம்பள அதிகரிப்புக்கு

# “சட்டத்திருத்தம்”

தனியார் துறை ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்கும் வகையில் சட்டம் திருத்தம் செய்யப்படும்.தற்போது தனியார்த் துறையில் அடிப்படை சம்பளம் 21 ஆயிரத்தில் இருந்து 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் அரச மற்றும் தனியார்த் துறையினரின் சம்பளம், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர் தரப்பினர் தமது அரசியல் இலாபத்துக்காக இவ்விடயத்தில் விமர்சனங்களை மட்டுமே முன்வைக்கின்றனர். கடந்த காலங்களில் நாங்கள் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், சம்பள அதிகரிப்புக்காகவும் போராடினோம். கடந்த காலங்களில் பெற்றுக் கொண்ட அனுபவங்களுக்கு அமைவாகவே சம்பள அதிகரிப்புக்கான யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

நாட்டில் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் தனியார்த் துறையில் அங்கம் வகிக்கிறார்கள்.இவர்களில் 60 சதவீதமானோரின் அடிப்படை சம்பளம் 21 ஆயிரம் ரூபாவாக காணப்படுகிறது.தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்கு அமைய இந்த தொகை போதுமானதாக அமையாது. ஆகவே இவ்விடயம் குறித்து தனியார் சேவை வழங்குநர்கள் மற்றும் முதலாளிமார்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆயிரம் ரூபாய் அடிப்படை சம்பளத்தை 27 ஆயிரம் ரூபாவாகவும், 2026. ஜனவரி மாதம் 30 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இதற்கமைவாக தனியார்த துறை தொழிலாளர்களின் அடிப்படை சம்பள சட்டம் திருத்தம் செய்யப்படும்.



## “நடவடிக்கை எடுங்கள்”



அரசாங்கத்தினுடைய முதலாவது வரவு- செலவுத் திட்டத்தை ஜனாதிபதி சபையில் சமர்ப்பித்தார்.

வரவு- செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள சில விடயங்கள் பாராட்டத்தக்கது. இருந்தபோதிலும், அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு எதிர்பார்த்த அளவு இடம்பெறவில்லை. அதேபோல், கிழக்கு மாகாணம் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றும் கிழக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(18) இடம்பெற்ற வரவு- செலவுத் திட்டம் மீதான முதலாவது நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த வரவு- செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை நான் இங்கு சொல்லி வைக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கென்று எந்தவொரு விசேட நிதியும் ஒதுக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்திற்கு பாரியளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை வரவேற்கிறோம். அதேபோல், கிழக்கு மாகாணம் யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் பிரதேசமாகவும் காணப்படுகிறது.

இருந்தபோதிலும் கிழக்கு மாகாண சபைக்குக் கூட போதியளவு நிதி அரசாங்கத்தினால் கிடைப்பதில்லை என்றார்.

## “கொடுப்பனவு அதிகரிப்பு போதாது”



வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 5000 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் நிர்மாணிப்புக்கு 1000 மில்லியன் ரூபாவும் என்ற அடிப்படையில் 6000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின்எம். பி. சாமர சம்பத் தசநாயக்க குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம் பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக ஐசிங் பூசிய கேக்கினை முன்வைத்துள்ளார். குறிப்பிட்டுள்ள திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் இல்லையேல் பிரச்சினைகள் மாத்திரமே ஏற்படும்.

நலன்புரி கொடுப்பனவுகள் அதிகரித்துள்ளதை வரவேற்கிறேன். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹாபொல கொடுப்பனவு 2500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. களனி பல்கலைக்கழக மாணவர்கள் தான் கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணிக்கு ஆதரவாக செயற்பட்டு கடந்த அரசாங்கங்களுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டார்கள். களனியில் இருந்து கொழும்புக்கு பேரணியாக வருவார்கள். ஆகவே தற்போது அதிகரித்துள்ள கொடுப்பனவை மேலும் அதிகரிக்குமாறு கோருகின்றேன்.

எமது அரசாங்கத்தில் முன்பிள்ளை பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் 2,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் 1,000 ரூபாய் மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு இது போதுமானதல்ல என்றார்.

## “மீள் குடியேற்றம் முடிவடையவில்லை”



யுத்தம் 2009ஆம் ஆண்டு முடிவடைந்தபோதும் இன்னும் அங்கு மீள் குடியேற்றம் முடிவடையவில்லை. சுமார் 17ஆயிரம் குடும்பங்கள் வரை இன்னும் மீளக் குடியேற்றப்பட இருக்கின்றன. எனவே இந்த அரசாங்கம் வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவர ஒதுக்கியுள்ள 1,500 மில்லியன் ரூபாய் போதுமானதாக இல்லை. 5,000 மில்லியன் ரூபாவாவது ஒதுக்க வேண்டும் என எதிர்க்கட்சியின் வன்னி மாவட்ட எம்.பியான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், வடக்கு மாகாண பாடசாலைகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அங்கு மாணவர்கள் மர நிழலில் கல்வி கற்றுவந்த நிலையில், அப்போது இருந்த அரசாங்கங்கள் பாடசாலைகளை நிர்மாணித்து அந்த நிலைமையை மாற்றியமைத்தபோதும் இன்னும் சில பாடசாலைகளின் நிர்மாணப் பணிகள் பூரணப்படுத்தப்படாமல் இருக்கின்றன. வன்னி மாவட்டத்தில் மாத்திரம் அவ்வாறான 38 பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் 14 பாடசாலைகளுக்கு நாங்கள் நிதி ஒதுக்கீடு செய்து அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்படும்போது, தேர்தல் வந்ததால் அந்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டன. அந்த பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்து நிறைவு செய்ய வேண்டும்.

மேலும் யாழ் வளாகமாக இருந்த வவுனியா பல்கலைக்கழகம் தற்போது தரம் உயர்த்தப்பட்டு வவுனியா பல்கலைக்கழகமாக மாறி இருக்கிறது. இதில் மருத்து பீடத்தை ஆரம்பிக்க நாங்கள் கடந்த காலங்களில் நடவடிக்கை எடுத்து வந்தோம். என்றாலும் இந்த வரவு செலவு திட்டத்தில் அது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.அதனால் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியில் இது தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோன்று, வடக்கு மாகாணத்துக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது தொடர்பில் அரசாங்கத்துக்கு நன்றி செலுத்துகிறோம். அந்த நிதி ஒதுக்கீட்டில் கடந்த காலங்களில் ,இடை நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## கல்வி சுமையை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது



பெற்றோரின் மீது சுமத்தப்பட்டுள்ள பிள்ளைகளின் கல்வி சுமையை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. மக்களுக்கு நேரடியாக நிவாரணமளிப்பதற்காகவே இம்முறை கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சர் சரோஜா போல்ராஜ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், எமது அரசினால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அனைத்து தரப்பினருக்கும் நிவாரணமளிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் சேவையாளர்களுக்கும், பெருந்தோட்ட மக்களுக்கும் சிறந்த முறையில் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த கால வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டு ஒரு சில குடும்பத்தினர் மாத்திரமே சுகபோகமாக வாழ்ந்தார்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தில் அந்த வழக்கம் நீக்கப்பட்டு, மக்களுக்கு நேரடியாக நிவாரணமளிக்கும் வகையில் கல்வி மற்றும் சுகாதார சேவைத்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.


# “பட்ஜெட்டை தூக்கியெறிய வேண்டும்”

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை இந்த அரசாங்கம் இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளது. அப்படியானால், கிழக்கு மாகாண உறுப்பினர்கள் அனைவரும் இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்து பிரச்சினைகளைக் கூற வேண்டும். கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்- தமிழ் மக்கள் அரசாங்கத்துக்கு முழுமையான ஆதரவு வழங்கினார்கள். அப்படிப்பட்ட எங்களை எங்கு சென்று யாரிடம் நிதி கேட்க சொல்கின்றீர்கள் எனக்கேள்வி எழுப்பிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பியான நிசாம் காரியப்பர், இந்த வரவு- செலவுத் திட்டத்தை தூக்கியெறிய வேண்டும் என்றார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் உரையாற்றுகையில்,

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் கிழக்கு மாகாணத்தை முற்றாகப் புறக்கணித்துள்ளது. கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை இந்தியாவிடம் இந்த அரசாங்கம் ஒப்படைத்துள்ளது. இது வெட்கக்கேடானது. அவ்வாறாயின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் அனைவரும் இந்தியத் தூதுவரைச் சந்தித்து எமது பிரச்சினைகளைக் கூற வேண்டும்.

நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன எழுதிய 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு முன்வைக்கப்படவில்லை. எனவே இந்த வரவு-செலவுத் திட்டத்தை தூக்கியெறிய வேண்டும். எமது மக்களை நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். வரவு-செலவுத் திட்டத்தைப் பிரதேச ரீதியாகப் பார்க்க வேண்டாம் என்று ஆளும் தரப்பின் உறுப்பினர் குறிப்பிடுகிறார். இது என்ன முட்டாள்தனமான பேச்சு, மக்களின் பிரச்சினைகளைப் பேசவே மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து பாராளுமன்றத்துக்கு அனுப்புகிறார்கள் என்றார்.



ரஷ்யா

உக்ரைன் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த

# ‘புட்டின் தயார்’

தேவைப்பட்டால் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி புட்டின் தயாராக இருப்பதாக, ரஷ்யா தெரிவித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர சவூதி அரேபியாவில் அமெரிக்க, ரஷ்ய உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈட்டுப்பட்ட நிலையில், ரஷ்யா இவ்வாறு தெரிவித்துள்ளது.

ரஷ்யா ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் ஊடகவியலாளர்களிடம் கூறுகையில்,

“தேவைப்பட்டால் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி புட்டின் கூறியுள்ளார்” என்றார்.



முன்னதாக, “உக்ரைன் பங்கு பெறாமல் மேற்கொள்ளப்படும் எந்த அமைதி ஒப்பந்தத்தையும் நாங்கள் ஏற்க மாட்டோம்” என ஜெலன்ஸ்கி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறும்போது, “ஒரு இறையான்மை கொண்ட நாடாக, நாங்கள் பங்கு பெறாத பேச்சுவார்த்தையில் எட்டப்படும் எந்த ஒரு ஒப்பந்தத்தையும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது” என்று தெரிவித்திருந்தார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் இரண்டாவது முறையாகப் பதவியேற்ற பின்பு, அமைதி பேச்சுவார்த்தைக்கான அழுத்தம் அதிகரித்துள்ளது. புடின் மற்றும் ஜெலன்ஸ்கியுடன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனித்தனியாகத் தொலைபேசியில் உரையாடல் நடத்தியுள்ளார்.

**அமெரிக்கா – ரஷ்யா பேச்சுவார்த்தை**

இந்தப் பின்னணியில் சவூதி அரேபியாவில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா உயர் அதிகாரிகள் சந்தித்து உக்ரைன் போரினை நிறுத்துவது குறித்து செவ்வாய்க்கிழமை (18) பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில் ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்கேய் லாவ்ரோவ், அமெரிக்கா வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபினியோவை சந்தித்தார். உக்ரைன் மற்றும் ஐரோப்பா இந்தப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா

மனைவியின் சாம்பலில்

## பானை செய்த கணவன்



சீனாவில், நபர் ஒருவர், தனது மனைவியின் சாம்பலை கொண்டு களிமண்ணில் பானை செய்து பாதுகாத்து வருகிறார்.

சீனாவின் ஷான்டாங் மாகாணத்தை சேர்ந்தவர் பியாவோ ஷூடாங். இவரது மனைவி லாங்ஜகுன, புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 2023ஆம் ஆண்டு உயிரிழந்தார்.

மனைவியின் மீது தீராக்காதல் கொண்டிருந்த பியாவோ, தனது மனைவியின் சாம்பலை கொண்டு களிமண்ணில் பானை செய்து பாதுகாத்து வருகிறார்.

இது குறித்த வீடியோக்கள் வைரலாகி வருகிறது. அதில் பியோவோ கூறுகையில், “இந்த கலசம் என்னுடையது. நான் இறந்த பிறகு என்னை மனைவியின் உடல் அருகே அடக்கம் செய்யலாம். நாங்கள் சொர்க்கத்தில் என்றென்றும் ஒன்றாக இருப்போம்” என்றார்

அர்ஜென்டினா

## அர்ஜென்டினா ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

அர்ஜெண்டினா ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர அந்நாட்டு எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளது.

அர்ஜெண்டினா ஜனாதிபதி ஜேவியர் மிலே (வயது 54) தலைமையிலான வலதுசாரி லிபர்டி அட்வான்சஸ் கூட்டணிக் கட்சி ஆட்சி நடைபெறுகிறது. இவர் லிப்ரா என்ற கிரிப்டோகரன்சி குறித்து எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். அதில் சிறு வணிகங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கு நிதியளிக்க லிப்ரா உதவும் என குறிப்பிட்டிருந்தார்.

மேலும், அதனை வாங்குவதற்கான இணைப்பையும் அதில் பகிர்ந்து கொண்டார். இதனால் அந்த பங்கின் விலை உயர்ந்தது. இதன்மூலம் கிரிப்டோகரன்சியை விளம்பரப்படுத்துவதாகக் கூறி ஜனாதிபதிக்கு எதிர்ப்புகள் கிளம்பின. சில மணி நேரங்களில் எக்ஸ் தளத்திலிருந்து அந்த பதிவை ஜேவியர் மிலே நீக்கியுள்ளார்.



இதனால் முதலீட்டாளர்கள் பலர் தங்களது பணத்தை இழந்தனர்.

ஜனாதிபதி ஜேவியர் மிலேவை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். மேலும் பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவும் பிரதான எதிர்க்கட்சியான சோசலிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது.

இந்த சூழலில் அர்ஜெண்டினாவில் உள்ள வழக்கறிஞர்கள் ஜனாதிபதிக்கு எதிராக மோசடி புகார்களைத் தாக்கல் செய்தனர். இதனிடையே ஜனாதிபதி ஜேவியர் மிலே மீதான மோசடி குற்றச்சாட்டுகளை விசாரிக்க நீதிபதி ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழகம்




பகடிவதையில் ஈடுபட்ட

## 7 மாணவர்கள் இடைநீக்கம்

திருவனந்தபுரம் அரசு கலைக்கல்லூரியில், பகடிவதையில் ஈடுபட்ட 7 மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கேரளா மாநிலம் திருவனந்தபுரம் காரிய வட்டம் பகுதியில் அரசு கலைக்கல்லூரி உள்ளது. இந்த கல்லூரியில் படித்து வரும் முதலாம் ஆண்டு மாணவர் ஒருவர், தன்னை சீனியர் மாணவர்கள் பகடிவதை செய்து துன்புறுத்தியதாக முதல்வரிடம் புகார் அளித்தார். அதன்பேரில், பகடிவதை தடுப்பு குழு அமைக்கப்பட்டது. இந்த குழு நடத்திய விசாரணையில், கடந்த 11ஆம் திகதி சீனியர் மாணவர்களுக்கும், ஜூனியர் மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. மோதலில் 3ஆம் ஆண்டு மாணவர்கள் 7 பேர் சேர்ந்து 2 ஜூனியர் மாணவர்களைத் தாக்கி உள்ளனர்.

இதுபற்றி 2 பிரிவினரும் கழக்கூட்டம் பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். அதன்பேரில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருவதும் தெரியவந்தது.

மேலும், இந்த சம்பவத்திற்கு பிறகும் சீனியர் மாணவர்கள் 7 பேரும் சேர்ந்து ஒரு மாணவரைக் கட்டி வைத்து அடித்துத் துன்புறுத்தியதோடு, சட்டையை கிழித்து முட்டி போடவைத்து முகத்தில் தாக்கி துன்புறுத்தியதும் பகடிவதை தடுப்பு குழு விசாரணையில் தெரியவந்தது.

அமெரிக்கா/ இந்தியா

சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்கள்

## கோஸ்டாரிகாவுக்கு நாடுகடத்தல்

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறிய இந்தியர்கள் கோஸ்டாரிகாவுக்கு நாடு கடத்தப்படவுள்ளனர்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறிய இந்தியர்களில் இதுவரை 332 பேர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவர்களில் ஆண்கள் கை, கால்களில் விலங்கிட்டு அழைத்து வரப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தியர்களை விலங்கிட்டு அழைத்து வரும் சம்பவத்துக்குக் காங்கிரஸ் உட்பட பல்வேறு கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை கோஸ்டாரிகாவுக்கு நாடு கடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இந்தியர்கள் உட்பட மத்திய ஆசியா நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோத குடியேறிகள் 200 பேரை விமானம் மூலம் மத்திய அமெரிக்க நாடான கோஸ்டாரிகாவுக்கு விமானம் மூலம் அமெரிக்கா நாடு கடத்த உள்ளது.

அமெரிக்காவில் இருந்து சட்டவிரோத குடியேறிகள் 200 பேர் (20) இராணுவ விமானம் ஊடாக கோஸ்டாரிகாவின் ஜுவன் சண்டமரினா விமான நிலையத்துக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

அங்கிருந்து அகதிகள் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படும் 200 பேரும் பின்னர் தங்கள் சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இதில், எத்தனைப் பேர் இந்தியர்கள் என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.







பந்து வீச்சாளர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய தீக்ஷன

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இலங்கையின் மகேஷ் தீக்ஷன முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது போட்டியில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது போட்டியில், ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய இந்தியாவின் குல்தீப் யாதவ், ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

இந்நிலையில், பாகிஸ்தானுக்கெதிரான முத்தரப்பு இறுதிப் போட்டியில் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நியூசிலாந்தின் மிற்செல் சான்ட்னெர், 12ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.மகேஷ் தீக்ஷன, 2.ரஷீட் கான், 3.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ், 4.குல்தீப் யாதவ், 5.ஷகீன் ஷா அஃப்ரிடி, 6.கேஷவ் மஹராஜ், 7.மிற்செல் சான்ட்னெர், 8.மற் ஹென்றி, குடகேஷ் மோட்டி, 10.மொஹமட் சிராஜ்.

இதேவேளை, இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது போட்டியில் 112 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் ஷுப்மன் கில், துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

இந்நிலையில், முத்தரப்புத் தொடரில் பாகிஸ்தானுக்கெதிரான போட்டியில் 87 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்காவின் ஹெய்ன்றிச் கிளாசென், ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானுக்கெதிரான முத்தரப்புத் தொடரின் இறுதிப் போட்டியில் 57 ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்தின் டரைல் மிற்செல், ஏழாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டு போட்டிகளில் 205 ஓட்டங்களைப் பெற்ற இலங்கையின் சரித் அசலங்க, 16ஆம் இடத்திலிருந்து எட்டு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது போட்டியில் 78 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் ஷ்ரேயாஸ் ஐயர், 10ஆம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஷுப்மன் கில்,
2.பாபர் அஸாம், 3.றோஹித் ஷர்மா, 4.ஹெய்ன்றிச் கிளாசென்,
5. டரைல் மிற்செல்,
6.விராட் கோலி,
7.ஹரி டெக்டர், 8.சரித் அசலங்க,
9. ஷ்ரேயாஸ் ஐயர்,
10. ஷே ஹோப், ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ்

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1. மொஹமட் நபி, 2.சிகண்டர் ராசா, 3.அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய், 4.மெஹிடி ஹஸன் மிராஸ், 5. ரஷீட் கான்.

அயர்லாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய சிம்பாப்வே

அயர்லாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை சிம்பாப்வே கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை சிம்பாப்வே வென்றதோடு, இரண்டாவது போட்டியை அயர்லாந்து வென்ற நிலையில், ஹராரேயில் செவ்வாய்க்கிழமை(18) நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

அயர்லாந்து: 240/6 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: அன்டி போல்பிரயன் 64 (99), லொர்கன் டக்கர் 61 (54), ஹரி டெக்டர் 51 (84), மார்க் அடைர் ஆ.இ 26 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: றிச்சர்ட் நகரவா 2/42, ட்ரெவர் குவான்டு 2/44, பிளஸிங்க் முஸர்பனி 1/47, வெலிங்டன் மஸகட்ஸா 1/58)

சிம்பாப்வே: 246/1 (39.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: பென் கர்ரன் ஆ.இ 118 (130), கிறேய்க் எர்வின் ஆ.இ 69 (59), பிரயன் பென்னிட் 48 (48) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிரஹாம் ஹுமெ 1/39)

போட்டியின் நாயகன்: பென் கர்ரன்

தொடரின் நாயகன்: பிரயன் பென்னிட்




## சம்பியன்ஸ் லீக்: வெளியேற்றப்பட்டது மிலன்







ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலன் வெளியேற்றப்பட்டுள்ளது.

நெதர்லாந்துக் கழகமான பெய்னூர்ட்டுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்கு முந்தைய சுற்றுப் போட்டியில் தோற்றே தொடரிலிருந்து மிலன் வெளியேறியுள்ளது.

பெய்னூர்ட்டின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்ற மிலன், தமது மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய நிலையிலேயே 1-2 என்ற மொத்த கோல் கணக்கில் தோற்று தொடரிலிருந்து வெளியேறியது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை சன்டியாகோ ஜிமென்ஸ் பெற்றதோடு, பெய்னூர்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூலியன் கர்ரன்ஸா பெற்றிருந்தார்.

இதேவேளை பெல்ஜியக் கழகமான கிளப் ப்ரூகேயிடம் 2-5 என்ற மொத்த கோல் கணக்கில் புதன்கிழமை (19) தோற்று இத்தாலிய சீரி ஏ கழகமான அத்லாண்டாவும் தொடரிலிருந்து வெளியேறியிருந்தது.

இந்நிலையில் போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவிடம் தோற்று பிரெஞ்சு லீக் 1 கழகமான மொனாக்கோவும் தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

கட்டார் பகிரங்க டென்னிஸ் தொடர்

## முதல் சுற்றிலேயே வெளியேற்றப்பட்ட ஜோக்கோவிச்



கட்டார் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து முதலாவது சுற்றிலேயே ஏழாம் நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச் வெளியேற்றப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்ற இத்தாலியின் மட்டியோ பெரெட்டனியுடனான போட்டியில் 6-7 (4-7), 2-6 என்ற நேர் செட் கணக்கில் தோற்றே சேர்பியாவின் ஜோக்கோவிச் தொடரிலிருந்து வெளியேறினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 20, பெப்ரவரி 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.